மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

A Customary Periodic Classification of Classical Literature

S.V. Selvam

Research Scholar, Department of Tamil, Madurai Kamaraj University, Madurai
Assistant Professor, V.H.N.Senthikumara Nadar College, Virudhunagar, India

Manuscript ID :
MT152A0088

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 02.11.2022
Revised: 07.11.2022
Accepted: 17.11.2022
Published: 22.11.2022

Pages : 91-96

DOI:
10.5281/zenodo.7372451

ABSTRACT:

A study has been done on how the division of time was in normal times, the interpretation of nature, and the events that took place in the habitations in normal times.

KEYWORDS:

Classical Literature, Periods, Short Periods, Long Periods, Habitats

செவ்விலக்கியங்களில் இயல்பான காலங்களில் கால பகுப்பு

செ.வே. செல்வம்,

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வி.இ.நா. செந்தில்குமார நாடார் கல்லூரி, விருதுநகர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

செவ்விலக்கியங்கள் இயல்பான காலங்களில் கால பகுப்பு எவ்வாறு இருந்தது பற்றியும், இயல்பு என்பதன் விளக்கம் பற்றியும், இயல்பான காலங்களில் வாழிடங்களில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பற்றி ஆய்வுச் செய்யப்பட்டுள்ளது.

கருச்சொற்கள்

செவ்விலக்கியம், பொழுதுகள், பெரும்பொழுது, சிறுபொழுது, வாழிடங்கள்

ஆய்வு அணுகுமுறைகள்

இவ்வாய்வில் இயல்பான காலங்களை வரையறையைச் செய்து கூறும் போது விளக்க முறைத் திறனாய்வு அணுகுமுறையும், காலங்களைப் பகுத்து கூறும் போது பகுப்பாய்வு திறனாய்வு அணுகுமுறையும் காலங்களில் நிகழும் செயல்பாடுகளைப் பற்றி கூறும் போது படைப்பு வழி திறனாய்வு அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன.

முன்னுரை

தமிழர்களின் பண்பாட்டினைப் பிரதிபலிப்பவனாகவும் பண்டைய கால மக்களின் வாழ்வியலை எடுத்துகூறும் கருவூலமாகவும் இருப்பவை செவ்விலக்கியங்கள் ஆகும். தினசரி வாழ்வு என்பது நம் வாழ்வியலில் மிக முக்கிய பதிவாகும். அதனைப் பற்றிய அக்கறைகள் நமக்குள் இருப்பதில்லை. முக்கிய நாட்கள் என்பது எதுவும் கிடையாது. எல்லா நாட்களும் முக்கியமான நாள்தான் என்பதனை அறிவுறுத்தவே இவ்வியல் ஆய்வின் காரணியாக அமைந்தது. இருபத்து நான்கு மணிநேரம் கொண்ட ஒரு நாள் நிகழ்வதற்கு காரணம் பூமி சுற்றுவதாகும் என்று வெளிநாட்டு அறிஞர்கள் கண்டுபிடித்தாக இன்றைய அறிவியல் கூற்று அமைந்தது. ஆனால் இதனை உண்மையில் பல் நூற்றாண்டுக்கு முன் நம் தமிழர் கண்டுபிடித்துள்ளனர். மனிதன் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தவர்கள் தமிழர்கள் அந்த வாழ்க்கைக்கான இலக்கணத்தில் பொழுதினைப் பிரிக்க இயலாது. செவ்விலக்கியங்களில் வாழ்வியல் சம்பந்தமான கருத்துக்களை இலக்கியமாக வகுத்துக் கூறும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் பொழுதுகள் காணப்படுகின்றன. செவ்விலக்கிய நிகழ்வுகள் எல்லாம் பொழுதுகளிலேயே

தொகுதி-2 பதிப்பு-4 டிசம்பர் 2022 | E-ISSN: 2583-0449

நிகழ்ந்துள்ளன என்று அரிதியிட்டுக் கூறலாம். தமிழர்கள் வகுத்த பொழுதுகளில் அவர்களின் வாழ்வியல் முறையை பகுத்துக் கூறுவதே இவ்வாய்வியலின் நோக்கமாகும்.

இயல்பான காலங்கள்

மனித வாழ்வு தோற்றம் பெற்றப்பின் இனக்குழுவாக மாறிய பின் சமூகம் என்ற அமைப்பாக மாறினான். தன் இல்லம் சார்ந்த வாழ்வியலுக்கானப் பொருளாதார தேவைக்காகவும், பொருளாதாரத்தை வளமிக்கதாக மாற்றியதன் காரணமாக அவனுக்கான தேவைகள் அதிகமானதின் காரணமாகவும், தான் சார்ந்த சமுதாயத்தின் தேவைக்காகவும் அன்றாட நிகழ்வுகளாக சிலவற்றை வகுத்து அதனை பழக்கப்படுத்திக்கொண்டான். அதனை தினமும் செயல்படுத்துவதற்குரிய காலமாக சிறுபொழுதுகள் இருந்தன. அந்த அன்றாட வாழ்வில் பொழுது புலர்ந்து, அடைந்து மீண்டும் பொழுது புலர்வது வரை நிகழும் நிகழ்வுகளை விளக்குவதாக அமையப்பெற்றுள்ளது.

காலங்களின் பகுப்பு

வாழிடங்கள் என்பது தமிழர்கள் வரையறுத்த நிலங்களுக்கு ஏற்றாற்போல் மாறுபட்டு இருந்துள்ளது. வாழிடங்கள் சார்ந்த வருணனையில், வாழிடங்களில் கட்டப்பட்ட வாழ்விட உறைவிடங்கள், கட்டடங்கள், உட்பட மனிதனால் உருவாக்கப்பட்ட புற அமைப்புகள் மற்றும் இயற்கைச் சூழல்கள் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளன. வாழிட வருணனையில் வாழிடத்தின் புறத்தோற்றம் மட்டுமின்றி வாழிடமானது ஒவ்வொரு காலச்சூழ்நிலைகளில் எவ்வாறு தென்படுகின்றது என்பதும், அச்சூழல்களுக்கேற்ப மக்களின் செயல்பாடுகள் அமைவதும் இடம் பெறுவதை அறிய முடிகின்றது.

பொழுதைத் தொல்காப்பியர் பெரும்பொழுது சிறுபொழுது என இரண்டாகப் பகுத்து விளக்குகின்றார். இவர் பெரும் பொழுதைக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில். முதுவேனில் எனவும், சிறுபொழுதை வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் எனவும் சுட்டுகின்றார்.

பொழுதுகள் பற்றிய கருத்துக்கள்

ஐவகைச் சிறு பொழுதுகளான காலைப் பொழுதும், உச்சி வேளையும் பிரிந்தார் செயலற்று வருந்துவதற்கு காரணமான மாலைக்காலமும், ஊரார் தூங்குகின்ற இடையாமமும், விடியற்காலமும் என்று பொழுதுகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இக்குறிப்புகள் வாழிடத்தில் வாழும் மக்களின் வாழ்வியல்

பொழுதுகளில்தான் நடைபெறுகின்றது. வாழிட வருணனையில் பொழுதின் பயன்பாட்டினை

> **"காலையும் பகலும் கையறு மாலையும்**
> **ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்**
> **பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்"[1]**

என வரும் குறுந்தொகைப் பாடலின் மூலம் ஒவ்வொரு பொழுதினுள் நடைபெறும் செயல்பாடுகளைத் தெளிவாக அறிய முடிகின்றது.

பொழுதினைக் கணக்கிடும் முறை

வாழிடங்களில் ஒன்றான நகரம், சிற்றூர், மற்றும் பேரூரின் அக அமைப்புகளின் செயல்பாடுகளில் மிகவும் முக்கிய காரணியாக விளங்குகின்றது. நகரத்தின் ஒவ்வொரு பொழுதிலும் மக்களின் செயல்பாடுகள் சிறப்பாக அமைகின்றது. ஏனெனில் வாழிடங்கள் பற்றி ஆராயும் போது அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையில் ஒரு செயலைச் செய்ய தேர்ந்து எடுத்த காலத்தை அறிய வேண்டும். அக்கால வாழிடங்களில் மக்கள் அறிவியலிலும், வசதி வாய்ப்பிலும் சிறந்தவர்கள் என்பதற்கு அந்நாளில் பொழுதினைக் கண்டறிய பயன்படுத்திய நீர்க்கடிகாரம் ஒன்றே போதுமானதாகும். அப்பொழுதினைக் கணக்கிட தனியே நாழிகைக் கணக்கர் இருந்தனர். குறுந்தொகைப்பாடலில் நாழிகையினைக் கணக்கிடுவோரை ஊர்க்காவலர் என்று குறிப்பிட்டுள்ளது. அவர்கள் ஒரு பாத்திரத்தில் நீரை நிரப்பி அதிலிருந்து நீர் சொட்டும் கால அளவைக் கொண்டு பொழுதினை அறிந்துள்ளனர். இவ்வூர் நாழிகைக் கணக்கர் இரவில் தூங்காமல் நாழிகையைக் கணக்கிட்டு அதை மணியோசையால் ஊரில் உள்ளவர்களுக்கு அறிவித்துள்ளனர். "நாழிகைக் கணக்கர் உறங்கிவிட்டால், நாழிகை அறிவிப்பது தவறிவிடும். அதுபோல், நான் உறங்கிவிட்டால், தலைவன் வரும் நேரத்தை அறியாமல் அவனைச் சந்திக்க முடியாமல் போய்விடும்" என்று தலைவி கூறுகின்றதனைப் பார்க்கும் போது நாழிகைக் கணக்கர் ஒவ்வொரு மணி நேரத்தினையும் தூக்கம் கொள்ளாமல் ஆராய்ந்துள்ளனர் என்பதனை,

"பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய
சிதட்டுக்கா யெண்ணின் சில்பெயற் கடைநாள்
சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
நள்ளென் யாமத் தையெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னானு மென்கண்
துஞ்சா வாழி தோழி காவலர்
கணக்காய் வகையின் வருந்தியென்
நெஞ்சுபுண் ணுற்ற விழுமத் தானே"[2]

என்ற இப்பாடல் உணர்த்துகின்றது. போரினை விரும்பி மேற்கொண்டு வாழிடத்திற்கு வெளியில் பாசறையில் தங்கியிருக்கும் மன்னருக்கும் பொழுதினைக் கணக்கிட கணக்கர் இருந்துள்ளனர் என்பதனை

"பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்"[3]

என்ற முல்லைப்பாட்டுப் பாடலின் மூலம் அறிய முடிகின்றது. வாழிடங்களில் உள்ள அனைவருக்கும் காலமும் பொழுதும் மிகவும் முக்கியமானதாக இருந்திருப்பது நாழிகையினைக் கணக்கிடுவதிலிருந்து நாம் அறிய முடிகின்றது.

"காரும் மாலையும் முல்லை" -

'குறிஞ்சி,
கூதிர், யாமம்' என்மனார் புலவர்

'பனி எதிர் பருவமும் உரித்து' என மொழிப

"வைகறை, விடியல், - மருதம்
எற்பாடு,
நெய்தல் ஆதல் மெய் பெறத் தோன்றும்"[4]

என்று தொல்காப்பியர் பொழுதுகளைப் பிரித்துக் கூறினாலும், அதில் ஒரு படி மேல் சென்று மேலும் ஒரு தகவலை நமக்கு கூறிச் சென்றுள்ளார். அவர் கூறும் சிறு பொழுதுகள் ஆறும், பெரும் பொழுதுகள் ஆறும் அகத்திணையான ஐந்திணைகளில் ஏதோ ஒரு திணைக்குள் நிகழ்வதாகக் கருதி விடக்கூடாது.

பெரும்பொழுதுகள், சிறும்பொழுதுகள் அனைத்தும் எல்லாத் திணைகளிலும் நிகழக்கூடியவையாகும். தொல்காப்பியர் மற்றும் அகத்திணைக்கு விளக்கமளித்த அனைத்து இலக்கண ஆசிரியர்களும் குறிப்பிட்டு ஒரு பொழுதினை குறிப்பிட்ட நிலத்திற்கு சுட்டியதன் நோக்கம் அத்திணைக்குரிய சிறப்பு பொழுதாக அந்த பொழுதுகள்

அமைந்துள்ளதனை தெரியப்படுத்துவதற்காக அவ்வாறு வகைப்படுத்தி குறிப்பிட்டுள்ளனர். அதாவது மல்லிகைப்பூ எல்லா ஊர்களிலும் விளையும். ஆனால் மதுரையில் விளையும் மல்லிகைக்கு மட்டும்தான் தனிச்சிறப்பு. அதுபோல தான் பொழுது பற்றி தொல்காப்பியர் போன்ற இலக்கண ஆசிரியர்களின் கருத்தாக அமைந்துள்ளது. அதைதான் திணை மயக்கம் என்று சுட்டுகின்றனர் பிற்கால உரையாசிரியர்கள் குறிஞ்சியில் சிறப்பாகக் கூறப்படும் யாமப்பொழுது மற்ற நான்கு நிலத்திலும் நிகழும்.

குறிப்பாக மதுரைக்காஞ்சியில் இடம் பெறும் யாமக்காட்சிகள் எல்லாம் மருத நிலத்திற்குரிய யாமப்பொழுதாகும். குறிஞ்சிப்பாட்டில் கூறப்படும் மாலைப்பொழுது குறிஞ்சி நிலத்திற்குரியதாக அமையப் பெற்றுள்ளன. மேலும் பெரும் பொழுதுகள் அனைத்தும் சிறு பொழுதுகளுக்குள்ளே தான் நடைபெறுகின்றது. சிறு சுழற்சியின் நீட்சியே பெருஞ் சுழற்சியாக அமையும். அதனால் பெரும்பொழுது, சிறுபொழுது என்று பாகுபடுத்தி கூறினாலும் சிறுபொழுதிற்குள்தான் பெரும்பொழுதின் அடக்கம் அதனைப் பிரித்து பார்க்க இயலாது. சிறுபொழுதின் நீட்சியே பெரும்பொழுதாகும் என்பதனையும், எல்லாத் திணைகளிலும் எல்லாப் பொழுதுகளும் நடைபெறும் என்பதனையும் அறிய முடிகின்றது.

முடிவுரை

இவ்வாறு செவ்விலக்கியங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலில் பொழுதுகள் இருந்ததனையும் காணமுடிகின்றது. காலங்களை கணித்துக் கூற காலக்கணக்கர்கள் இருந்ததனை அறியமுடிகின்றது.

அடிக்குறிப்பு

1. குறும் பாடல் எண் : 32
2. குறும் பாடல் எண் : 261
3. மு.பாட்டு பாடல் வரி : 55
4. தொல். அகம் : 7 முதல் 10 வரை

துணைநூற்பட்டியல்

1. எட்டுத்தொகை நூல்கள் தொகுப்பு : ஔவை துரைசாமி பிள்ளை பதிப்பு திருநெல்வேலி சைவ சித்தாந்தக் கழகம்.
2. சிலப்பதிகாரம் : வேங்கடசாமி நாட்டார் உரை, சாரதா பதிப்பகம்
3. மணிமேகலை : வேங்கடசாமி நாட்டார் உரை, சாரதா பதிப்பகம்
4. பத்துப்பாட்டு : ச.வே.சுப்பிரமணியன் உரை, மணிவாசகர் பதிப்பகம்

REFERENCES

1. Compendium of Octopus Texts : Auvai Duraisamy Pillai Edition Tirunelveli Saiva Siddhantak Kazhagam.
2. Silapathikaram : Text by Venkatasamy Natar, Sarada Publishing House
3. Manimekalai : Text by Venkatasamy Natar, Saratha Publishing House
4. Pathupattu : Text by S. V. Subramanian, Manivaskar Publishing House